# ‘சுற்றுச்சூழல் விழிப்புணர்வு குறைவால் அதிகரிக்கும் நோய்கள்’

திருச்சி, ஆக.29-

திருச்சியில் தண்ணீர் அமைப்பின் 3வது ஆண்டு தொடக்கவிழா நேற்று நடந்தது. அமைப்பின் செயலாளர் நீலமேகம் வரவேற்றார்.

விழாவில் சிறப்பு விருந்தினர் டாக்டர் சிவராமன் பேசுகையில், ‘சுற்றுசூழல் என்பது சமூகம் சார்ந்தது. சுற்றுச்சூழலை பாதுகாக்காவிட்டால், அது நம்மை திருப்பி தாக்கும். இதற்கு உதாரணம் சென்னையில் கடந்த ஆண்டு நிகழ்ந்த வெள்ள பாதிப்பு. வெள்ளம் வடிந்ததும், மறுசுழற்சி செய்யமுடியாத குப்பைகள் (பிளாஸ்டிக்) 85 மெட்ரிக் டன் தேங்கியது. இதில் இருந்து நாம் விழித்துக் கொள்ள வேண்டும். அனைவரும் துணி பைகளை உபயோகிக்கும் பழக்கத்தை கடைப்பிடிக்க வேண்டும்.



தண்ணீர் அமைப்பின் ஆண்டு விழாவில் மருத்துவர் சிவராமன், மாநகராட்சி கமிஷனர் பிரேமா ஆகியோர் பசுமை விருதுகளை வழங்க, பசுமை வளாகம் அமைத்த பாரதிதாசன் பல்கலைக்கழகம் சார்பில் பதிவாளர் திருச்செல்வம், துளசி பாலசுப்பிரமணியன் ஆகியோர் பெற்றுக் கொண்டனர். அருகில் தண்ணீர் அமைப்பு நிர்வாகிகள் சேரன், நீலமேகம், சிவகுருநாதன், விஸ்வநாதன் ஆகியோர்.

பிளாஸ்டிக் உபயோகத்துக்கு விடை கொடுக்க வேண்டிய சூழலில் நமது சுற்றுச்சூழல் உள்ளது. நாம் பயன்படுத்தும் உணவு பொருட்களை மிகவும் கவனமுடன் தேர்ந்தெடுக்க வேண்டும். தற்போது சிறுவயதிலேயே நோய்கள் தாக்கம் அதிகரித்து வருகிறது. பூச்சிக் கொல்லிகளை பயன்படுத்துவதால் நமது நிலம் மாசுபட்டு விட்டது. அதில் விளையும் உணவு பொருட்கள் நமது உடலுக்கு கேடுவிளைவிப்பதாக உள்ளன. பூச்சிக்கொல்லிகள் பயன்படுத்தும் நிலத்தில் விளையும் உணவு பொருட்கள் நமக்கு புற்றுநோயை தரக்கூடிய ஆபத்து உள்ளது என்று உலக சுகாதார நிறுவனம் அறிவித்துள்ளது. இதனால் சில நாடுகள் விவசாயத்தில் பூச்சிக்கொல்லிகள் பயன்பாட்டை நிறுத்தி விட்டன. ஆனால் நமதுநாட்டில் இது குறித்த விழிப்புணர்வு ஏற்பட வில்லை. இதுபோன்ற சிக்கலான பிரச்னைகளால் நாம் விரும்பி, உண்ணும் உணவு நமக்கு கேடுவிளைவிக்கக்கூடியதாக மாறி வருகிறது.

சுற்றுச்சூழல் என்பது சுயநல சிந்தனையை மீறியதாக இருக்க வேண்டும். இதுகுறித்த மாற்றம் ஒவ்வொருவரிடமும் உருவாக வேண்டும். மரம் வெட்டக்கூடாது, ஒலி மாசுபாடு கூடாது என்பது போன்ற தொலைநோக்கு சிந்தனை ஆயிரத்து 600 ஆண்டுகளுக்கு முன்பே நம் தமிழரிடம் இருந்தது குறுந்தொகையில் கூறப்பட்டுள்ளது. இப்படி தொலைநோக்கு சிந்தனை கொண்ட தமிழ் சமூகம் இன்று நோயின் பிடியில் சிக்கி தவிப்பதற்கு காரணம் சுற்றுச்சூழல் விழிப்புணர்வு இல்லாதது தான்’ என்றார்.

நிகழ்ச்சியில் திருச்சி மாநகராட்சி கமிஷனர் பிரேமா, சுற்றுச்சூழல் பாதுகாப்பு குறித்து பேசினார். தண்ணீர் அமைப்பின் இணை செயலாளர் தாமஸ் நன்றி கூறினார்.